**கவனிக்க.-** 2010.04.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1649 - 2010 අප්‍රේල් මස 09 වැනි සිකුරාදා - 2010.04.09

1649 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (III) - வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | 142 |
| அமைப்புகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| வியாபார உரிமை அடையாள அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| ஆக்க உரிமைகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| தொழிலக வடிவ அமைப்புகள் பற்றிய அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில்` பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

*வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் ஆக்கவுரிமைகள் வியாபாரக்குறிகள் பதிவாளர், ஆக்கவுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகம், 'சமாகம் மெதுற', 3 ஆம் மாடி, இல. 400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.*

### பரிசோதனைக்குரிய நேரம்

*அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 2.30 மணி வரையும் திறந்திருக்கும் எனினும் பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 2 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

*ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்ட தென்றும் விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.*

### கூட்டுச் சேர்க்கை

*1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் புலமைச் சொத்துச் சட்டக் கோவைச் சட்டம் 112 ஆம் பகுதியின் கீழ் பிரசுரிக் கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத் துடன் கூட்டுச்சேர்க்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந் தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.*

### எதிர்ப்பு

*பின்வரும் வியாபாரச் சேவை அல்லது கூட்டுக் குறிகள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தமானப் பத்திரிகைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ரூபா 750 காசாகவோ, காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ, அஞ்சற் கட்டளையாகவோ அல்லது வங்கி வரைவாகவோ செலுத்தி எம் 2 பத்திரத்தில் (அதற்கான இணைப்புப் பிரதியுடன்) எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும்.*

*1) சின்னம் இல. : 105752 ; (2) பெற்ற திகதி : 2001 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி ; (3) முந்துரிமை கோரப்பட்டால் : - ; (4) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் (சின்னத்தின் சொந்தக் காரர்) : புரௌன் அன்ட் கம்பனி லிமிட்டெட் 1861 ஆம் ஆண்டின் கூட்டுப்பங்குக் கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்டது. இல. 481, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 - இறக்குமதியாளர்களும், விநியோகத்தர்களும் ; (5) இலங்கையில் அவருக்கேதும் விலாசமிருப்பின், அது : - ; (6) வகுப்பு : 19 ; (7) பொருள்கள் அல்லது சேவைகள் : கட்டடப் பொருட்கள், இயற்கை மற்றும் செயற்கை கற்கள், சீமெந்து, சுண்ணாம்பு, சாந்துக்கலவை, காந்தும் பரலும், மண்ணிலான குழாய்கள், அல்லது சீமெந்துக் குழாய்கள், வீதிகள் கட்டும் பொருட்கள், நிலக் கீழ் சாடியும் பிற்றுமின்னும், நகர்த்தக்கூடிய கட்டடங்கள், கல்லாலான நினைவுச் சின்னங்கள், புகை போக்கிக் கலன்கள் : (8) சின்னத்தின் பிரதி உருவம் :*

**BROWNS**

*இச்சின்னம் 76984 ஆம் இலக்க வியாபாரச் சின்னத்துடன் இணைந்து கொள்ளும்.*

*கலாநிதி டி. எம். கருணாரத்ன,
புலமைச்சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி.*

*இலங்கைத் தேசிய புலமைச்சொத்து அலுவலகம்,
கொழும்பு,
2002 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி.*

*4-245 -09.04.2010 ஆந் திகதிய வர்த்தமானி இல. 1649.*

*1) சின்னம் இல. : 105765 ; (2) பெற்ற திகதி : 2001 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி ; (3) முந்துரிமை கோரப்பட்டால் : - ; (4) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் (சின்னத்தின் சொந்தக் காரர்) : புரொளன் என்ட் கம்பனி லிமிட்டெட் 1861 ஆம் ஆண்டின் கூட்டுப்பங்குக் கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்டது. இல. 481, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 - இறக்குமதியாளர்களும், விநியோகத்தர்களும் ; (5) இலங்கையில் அவருக்கேதும் விலாசமிருப்பின், அது : புரௌன் அன்ட் கம்பனி லிமிட்டெட், இல. 481 ஆம் ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 ; (6) வகுப்பு : 28 ; (7) பொருள்கள் அல்லது சேவைகள் : விளையாட்டுகளும் விளையாட்டுப் பொருள்களும் (ஆடைகள் தவிர) ஜிம்னாஸ்டிக் மற்றும் விளையாட்டுப் பொருள்களும் கிறிஸ்மஸ் அலங்காரங்களும் ஆபரணங்களும் : (8) சின்னத்தின் பிரதி உருவம் :*

**BROWNS**

*கலாநிதி டி. எம். கருணாரத்ன,
புலமைச்சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி.*

*இலங்கைத் தேசிய புலமைச்சொத்து அலுவலகம்,
கொழும்பு,
2002 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி.*

*4- 246 -09.04.2010 ஆந் திகதிய வர்த்தமானி இல. 1649.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.